ஓம்: கணேஸாய நம:

# காதலற்ற கல்யாணம்

அல்லது

## பெண்வீட்டாரைக் கொள்ளை யடித்தல்.




இஃது தமிழ் நாவலரும்

பெங்களூர் குணபோதினி பத்திராதிபராகிய

அ. ரா. மாதவராய முதலியார் அவர்களால்

இயற்றப்பட்டது.



தி. இராஜகோபால் முதலியார் அவர்களால்

வெளியிடப்பட்டது.

நெ. **302,** தங்கசாலை தெரு மதராஸ்.

**1928**


காபிரைட்] விலை அணா **1**. [ரிஜிஸ்டர்ட்

இது மூன்றும் வருட ஆரம்பம்.

# ஆநந்த குணபோதினி

ஒரு நூதன உயர்தரத் தமிழ் மாதப் பத்திரிகை.

இது தமிழ் அறிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் உன்னதம் வாய்ந்தது. 10,000 சந்தாதாரர்களை யுடையது, வருஷசந்தா ரூபாய் ஒன்றே. (ரூ. 1-0-0) வெளிநாடுகளுக்கு ரூ. 1-4-0 பிரதி மாதமும் 48 பக்கங்கள் கொண்டது. பிரஸித்த அநுபவ ஞான சாஸ்திரி இதன் ஆசிரியர்.



இத்தகைய நவீன மாத சஞ்சிகை இது வரையில் வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலயர்த சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகின்றது. வெகு முக்கியமான விஷயங்களைக் குறித்து அநேக வியாசங்கள் இதில் ஒவ்வொரு தடவையும் தோன்றும். குறித்த நேரத்தில் வருவது. காலத்தை யேர்ட்டிய கருத்துக்கள் நிரம்பியது. படிப்பவர்களுக்கு நன்னடக்கையும், லௌகிக பக்தியும், பாஷா ஞானமும், சுதேச சிந்தனையும், ஈசுவர பக்தியும்,. ஆழ்ந்த யோசனையும் உண்டாகக் கூடிய விதமாய், உலகத்திலுள்ள சர்வ ஜனங்களுக்கும் பொதுவாய், சகல மதஸ்தர்களுக்கும் இன்பமாய், எல்லா ஜாதியார்களுக்கும் ஏற்றதாய், எப்போதும் நல்ல விஷயங்கள் இருக்கப் பெற்றதாய், சொல் நயம் பொருள் நயம் தோன்ற எழுதபபட்டுத் தமிழ் உலகமெல்லாம் சென்று உலாவி வருகின்றது. ஒவ்வொரு தடவையும் "விகடப்பிரதாபன்" தோன்றுவான். விகடத் தலையங்கங்களும், ஹாஸ்யங்களும் தோன்றி சலித்துப் போன மனதையும் உல்லாசப்படுத்திவிடும். இப்பத்திரிகை வெகு சிறந்ததென்பதை பிறருடைய சிபாரிசின்றி ஒவ்வொருவரும் தங்களுடைய அநுபோகத்தில் தாங்களே அறிந்துகொள்ளலாம். சொற்ப சந்தாவையும் உற்று நோக்குங்கள். உடனே எழுதுங்கள்!! ஒரு மாதிரி காபி வரவழைத்துப் பாருங்கள்.!!!

'ஆநந்த குணபோதினி" ஆபிஸ் 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்

உ

ஓம் கணேஸாயநம:

தேன்முகம் பிலிற்றும் பைந்தாட் செய்யபங் கயத்தின் மேவு
நான்முகத் தேவே நின்னால் காட்டிய அகில மாயை
கான்முயர் கொம்பே யென்கோ கானலம் புனலே யென்கோ
வான்முக முளரி யென்கோ மற்றென்கோ விளம்பல் வேண்டும்.

# காதலற்ற கல்யாணம்

அல்லது

## பெண்வீட்டாரைக் கொள்ளையடித்தல்

நமது இந்திய தேசமானது இப்போது சகல வளப்பங்களிலும் குறைவுற்று இருக்கின்றதெனப் பல மேதாவிகள் கூறிவருகின்றனர். அதற்குக் காரணம் பல உள எனினும், வரதட்சணை யென்னும் கொடிய வழக்கமும் அவற்றில் ஒன்றாகும். இதனைக் கன்னிகாதானம் எனப் பொருள் படுத்துகின்றனர். கன்னிகாதானம் என்றால், ஒருவனுக்கு ஓர் பெண்ணை மணம் செய்து கொடுத்தல் எனப் பொருள் படும்.

முற்காலத்தில் இவ்வழக்கமானது மணஞ் செய்து கொள்ளும் கணவன் மனைவி ஆகிய இவர்களுக்குள் நிரந்தரமான ஒற்றுமையினையும் விசுவாசத்தினையும் உண்டு

---

"ஆநந்த குணபோதினி" என்ற சஞ்சிகை ஸ்ரீமான் தி. இராஜகோபால் முதலியார் அவர்களால் பிரதி மாதமும் வெளியாக்கப் படுகிறது.

செய்து வந்தது. தற்காலத்திலோ வாதட்சணை என்னும் வார்த்தையினைக் கேட்டதும், மணஞ் செய்து கொடுக்கப் பல பல பெண்களை வைத்திருக்கும் தாய் தந்தையர்களுக்குப் பெரிய திகிலுண்டாகிறது. ஏனெனில், பெண்வீட்டார் எவ்வளவு ஏழைகளா யிருந்தாலும் வதுவை செய்து கொள்ளும் மணாளர்கள் அவர்களிடமிருந்தும் வாதட்சணை பிடுங்க எண்ணங் கொள்கின்றனர்.

சொல்ப சம்பாதனையால் வயிற்றை நிறப்பிக்கொண்டு காலத்தைக் கழிப்பதற்கே கஷ்டத்துடனிருக்கும் ஏழைத் தந்தைகளிடத்தும் தயை தாட்சண்யமின்றி வாதட்சணை பிடுங்கப்படுகின்ற தென்றால், அதனால் உண்டாகும் தீமைகளை என்னென்று கூறுவது.

வாசகர்களே! இதனுண்மையை சற்று ஆய்ந்தோய்ந்து பாருங்கள்.

உங்களுடைய பெண்ணை மணந்து கொள்வதற்காக நீங்கள் ஒருவனுக்குப் பணத்தைக் கொடுக்கிறீர்கள். அல்லது, நீங்கள் பெண்ணைக் கொடுப்பதற்காக ஒருவன் உங்களுக்குப் பணத்தைக் கொடுக்கிறான். உண்மையினை யோசிக்குங்கால் ஒருவரை யொருவர் பணங்கொடுத்து வாங்குவதாகப் புலப்படுகிறது.

சே, சே, இதென்ன, அவமானத்தைத் தரத்தக்க கொடிய வியாபாரம். மாந்தர்களை விற்பதும் நியாயமாகுமா? இஃது முற்காலத்தில் பரவிவந்த அடிமைத்தனம்போல் காணப்படவில்லையா?

---

"ஆநந்த குணபோதினி" என்ற மாத சஞ்சிகையில் இனிய நாவல்கள், சிறுகதைகள், வேடிக்கை விகடங்கள், அரிய பாடல்கள் முதலியன வெளிவருகின்றன.

நமது இந்திய சகோதரிகள் தங்களது இயற்கை நற்குணத்திற்கும், நிறம்பிய பக்திக்கும், பொறுமைக்கும், அடக்கமான தன்மைக்கும் பெயர்பெற்றவர்களென நாம் கேள்விப்படுகிறோமே.

மிகவும் செல்வாக்குடனும், பெருமையுடனும் புகழப் பட்டு வந்த நமது இந்திய மாதாவின், கண்ணியம் பொருந் திய குற்றமற்ற கன்னியர்கள் வியாபாரச் சரக்குகளாகிய ஆடு மாடுகளைப்போல் விலை மதிக்கப்படவும் காலம் நேரிட் டதே. இதுவும் நமது இந்திய மாதர்களின் விதியோ?

வரதட்சணையெனும் இக்கொடிய பிசாசானது சொற்ப சம்பாதனையுடைய இந்திய தந்தையர்களைக் கடன்காரர்க ளுடைய இரக்கமற்ற வலையில் சிக்கச் செய்துவிடுவதால், அவர்கள் மேலும் மேலும் கடன் வாங்கி, கடைசியில் துக் கத்திற் காளாகி வருகின்றனர்.

இந்த வரதட்சணை வாங்கும் வழக்கத்தினை நமது புராண சாஸ்திரங்கள் கண்டிக்கின்றன. புத்தி கூர்மையினை யுடைய பல பெரியாரும் இதனை இழிவுபடுத்திக் கூறு கின்றனர்.

இப்போது நாம் கையாடிவரும் 1872-ம் வருடத்திய இந்திய விவாகச் சட்டம் III-வது பிரிவிலும் இதைப்பற்றி ஒன்றும் கூறப்படவில்லை.

இந்தச் சட்டத்தை சீர்திருத்த வேண்டுமெனக் கருதி 1912-ம் வருஷம் கனம் பொருந்திய பி. என். பாசு என்பார்

---

"ஆநந்த குணபோதினி" என்ற மாத சஞ்சிகையின் வருஷ சந்தா ரூபா 1-தான்; இந்த தொகையை யனுப்பி உடனே சந்தாதாரர்களாகுங்கள்.

கொண்டுவந்த மசோதாவிலும் வரதட்சணை வாங்கலாமெனக் காண்கிலேம்.

இவ் வரதட்சணையானது விவாககாலத்தில் மட்டுமன்றி விவாகத்தைச் சார்ந்த பிரதி சடங்குகளிலும் கேட்கப் படுகிறது.

இப்புத்தகத்தினை யாம் எழுதும்போது மேசையின் மீது ஒரு கடிதத்தைக் கண்டோம். அதைப் பிரித்து வாசிக்கையில், அதில் கல்நெஞ்சப் பாதகராகிய ஒரு பூமான், தான் பலர் அறிய விவாகம் செய்துகொண்ட ஓர் இளங்கன்னிகையைத் தன்னுடைய வீட்டிற் கழைத்துக்கொண்டு போவதற்காகப் பிரத்தியேகமான வரதட்சணை கொடுத்தாலன்றி, முடியாதென மறுப்பதாக எழுதியிருந்தது.

இதனை வாசித்ததும் மனத்தாங்க லடைந்தோம்.

என்னே கலிகாலக்கொடுமை ? இத்தகைய தீய வழக்கங்களை இந்திய மாதா இன்னும் எத்தனை காலம் சகிப்பளோ ?

ஜீவகாருண்யம் நிறைந்த புண்யபுருடர்கள் இவ்வழக்கத்தினை அடியோடு ஒழிக்க முன்வாராமல், இன்னம் எத்தனை காலம் உறங்குவரோ ? இக் கொடிய பிசாசானது கேட்பாரின்றி தன்னுடைய கொடிய சிறகுகளை விரித்துக்கொண்டு இன்னம் எத்தனை காலம் ஆடுமோ ?

இதனை உடனே ஒழிக்காவிடில் நமது இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்கு ஓர் இடையூற்றினைத்தரும் என்பதற்கையமில்லை.

---

இனிய நாவல்களையும், வேடிக்கை விகடங்களையும், சிறு கதைகளையும், சன்மார்க்க போதனைகளையும் வாசிக்க விரும்பினால் "ஆநந்த குணபோதினி" என்ற மாத சஞ்சிகையை வாங்குங்கள்.

பெண்கள் பருவமடையுமுன் விவாகம் நடத்தப்பட வேண்டுமென்னும் வழக்கங்கொண்டுள்ள ஜாதியுள் இக் கொடிய பேய் தாராளமாய் நுழைந்து தன்மனம்போலாடு கின்றது. ஏனென்னில், விவாகமாகுமுன் தங்களுடைய பெண்கள் புஷ்பிணி யடைந்துவிட்டால் ஊரிலுள்ளோர் இழிவுபடுத்திக் கூறுவரே எனத் தாய் தந்தையர்கள் பய மடைந்து, பிள்ளை விட்டார் கிஞ்சிற்றேனும் வாய்க் கூச்சமும், நாணமுமின்றிக் கேட்கும் அதிகத் தகையினைக் கொடுக்க நேரிடுகின்றது.

இவ் விஷயத்தைப்பற்றி விரிவாகப் பேசுமுன் விவாக மென்பது என்னவெனக் கவனிப்போம்.

விவாகமென்பது ஸ்திரீ புருஷர்களுட்குள் தெய்வத்தன் மையினால் உண்டாகும் ஓர்வித அன்பைப் பந்தப்படுத்தி வைப்பதேயாகும்.

இத்தகைய விவாகமின்றி ஸ்திரீ புருடர்கள் இல்லறத் தினை நடத்தக்கூடாதோ வெனில் கூடும். ஆயினும், நம்மு டைய மூதோர் சரித்திரங்களை ஆழ்ந்து யோசிக்கின், தான் விரும்பும் கன்னிகையானவள் தனக்கே சொந்தமானவ ளாகி, சதாகாலமும் தன்னுடனேயே யிருக்கவேண்டு மென்ற புருடர்களின் பிரியமானது விவாகம் என்னும் ஓர் சடங்கிற்குக் காரணமாயிற்றெனப் புலப்படும்.

இதுவுமன்றி, பெண்களுக்குக் குழந்தைகளின்மீ தண் டாகும் ஓர்வித அன்பும் அதற்குக் காரணமாய் நிற்கின்றது.

---

"ஆநந்த குணபோதினி" என்ற சஞ்சிகை ஸ்ரீமான், தி. இராஜகோபால் முதலியார் அவர்களால் பிரதி மாதமும் வெளியாக் கப் படுகிறது.

நாட்செல நாட்செல ஓர் மனைவியானவள் தன்னுடைய நாயகனை அதிக காதலுடன் நேசித்து வருவதற்குக் காரணம், அவன் தன்னுடைய நாயகன் என்பதுமாத்திரமல்ல; பிரதி நிமிடமும், பிரதிமணியும், பிரதிநாளும் தான் அதிக அன்பு பாராட்டி, சீராட்டி, பாலூட்டி வளர்த்துவரும் தன்னுடைக் குழந்தைகளின் தந்தையென்பதும் முக்கிய காரணமாகிறது.

இத்தகைய விசுவாசத்தினால்தான் ஓர் மனைவியானவள் தனக்குப் புருடன்மீது எவ்வளவு சலிப்பு உண்டாயினும் அவனை விட்டுப் பிரிய மனமில்லாதவளாகின்றாள். அவ்வாறன்றி, அதிக சலிப்பினால் ஒரு மனைவி தன்னுடைய நாயகனை விட்டுப் பிரியத் துணிந்து விட்டால், தான் பெற்று இதுகாறும் அதிக அன்புடன் சீராட்டிப் பாலூட்டி வளர்த்த குழந்தைகளை விட்டுப்போக மனமில்லாமல் தவிக்கிறாள்.

போக விரும்பினால், அவள் அக்குழந்தைகளை தான் அவற்றின்மீது வைத்துள்ள ஆசைகளையெல்லாம் அடியோடு மறந்து தன்னுடைய நாயகனிடத்தில் விட்டுச் செல்லவேண்டும். இதைச் செய்ய எந்த மாதாவிற்கும் மனம் வராது. அவ்வாறில்லையேல், அக்குழந்தைகளை யெல்லாம் தானே அழைத்துச்சென்று அன்னமூட்டி வளர்த்து, கல்வி கற்பித்து, நன்னடக்கையில் பழக்குவித்து, மாட்சிமை பொருந்திய நம் நாட்டில் அடக்கமும், சாந்தமும், நற்குணமுமுள்ள மனிதர்களாக்கிப் பிரபஞ்சத்தில் வயிறுவளர்க்க ஓர் தொழிலில் விட வேண்டும்.

---

"ஆநந்த குணபோதினி" என்ற மாத சஞ்சிகையில் தமிழ் வித்வான்களால் எழுதப்படும் இனிய நாவல்கள், சிறுகதைகள், வேடிக்கை விகடங்கள், அரிய பாடல்கள் முதலியன வெளிவருகின்றன.

இவ்வளவு கடினமான வேலைகளை ஓர் தாயானவள் செய்வது அசாத்தியமாகையால், இத்தகைய மனைவியர்களின் நிலைமை அதிக கவலைக்கிடமாய் விடுகின்றது.

ஆகவே, ஒருவன் விவாகம் செய்துகொள்ளுங்கால் அவனுடைய இன்பமானது தன்னருமை மனைவிமட்டுமென்றும், தன் மனைவியின் இன்பமானது நாயகன்மட்டும் மாத்திரமன்றி, அதிக ஆவலுடன் எதிர்பார்க்கும் குழந்தைகள்மட்டும் நீடித்திருக்குமென்றும் கூறுவது நியாயமேயாகும். விவாகமென்னும் ஓர் பந்தத்தினை ஏற்படுத்த சதிபதிகளாகிய இருவர்கட்குள் ஒற்றுமையான அன்பு இருக்க வேண்டுவது மிகவும் அத்தியாவசியமென கல்வி கேள்விகளில் நிறைந்துள்ள பல பூமான்கள் கண்டறிந்திருக்கின்றனர்.

அத்தகைய அன்பில்லாவிடில், பெரியோர்களின் பக்தி நிறைந்த ஆசீர்வாதத்தாலும் அதிக பணச்செலவாலும் உண்டாக்கப்பட்ட விவாகம் எனும் ஓர் வலிவுள்ள கட்டிடமானது நொடிப்பொழுதில் அடி பெயர்ந்துவிடக் கூடும்.

அன்பேன்பது விவாகத்திற்கு ஆதிபீடமென்றும், விவாகமானது அதை நிலை நிறுத்தும் ஓர் சடங்கு என்றும் கூறப்படுகிறது.

விவாகத்தினை நடத்துங்கால் சதிபதிகளாகிய இருவரும் பரிபூரண சந்தோஷத்துடன் வாழவேண்டுமென்பதே நம்முடைய நோக்கம்.

அப்படியிருக்க, கிட்டிபோட்டு வற்புறுத்தி வரதட்சணை வாங்கி நடத்தும் விவாகங்களால் எப்படி பரிபூர்ண அன்பு

---

"ஆநந்த குணபோதினி" என்ற மாத சஞ்சிகையின் வருட சந்தா ரூபா 1-தான். இந்த தொகையை யனுப்பி உடனே சந்தாதாரர்களாகுங்கள்.

ஏற்படும்? இத்தகைய காதலற்ற கலியாணங்கள் கணக்கில்லாமல் நடந்திருக்கின்றன. இந்த சந்தர்ப்பங்களில் ஒற்றுமையும் மன ஊக்கமும் எப்படி எதிர்பார்க்கக் கூடும்?

பெண் கொடுப்போரும் வாங்குவோரும் மன ஒற்றுமை நிறைந்த சந்தோஷத்துட னிருக்கவேண்டுமாகில், வாங்கப்படும் பணமானது தாராளமாகவும் முழுமனதுடனும் கொடுக்கப்பட்டதா யிருக்கவேண்டும்.

மணமுடிக்குங்கால், மிகவும் நற்குணமும், கல்வியும், செல்வத்தினைத் தேடி இல்லறத்தினை நடத்த வல்லமையும் பெற்ற கணவனை ஓர் பெண்ணிற்குக் கொடுப்பதும்; அழகும், நற்குணமும், அடக்கமும், சாமர்த்தியமும் நிறைந்த ஓர் பெண்ணை ஒருவனுக்குத் தேடிக்கொடுப்பதும்தான் முக்கிய பரிசாகும். அவ்வாறன்றி, வரதட்சணை வாங்கி நடத்தும் விவாகம் உசிதமானதாகாது.

இதனை யறியாத பலர் தங்களுடைய பிள்ளைகள் உயர்தர பரீட்சையில் தேறிவிட்டால் அதிக பேராசையடைந்து எவ்விடத்தில் அதிகமான தொகை வரதட்சணையாகக் கிடைக்குமென வாய்திறந்து திரிகின்றனர்.

இதனால் நேரிட்டுவரும் துன்பங்கள் பல உள எனினும் அவற்றில் சில முக்கியமானவற்றைக் கீழே குறித்துள்ளோம் :—

1. மிகவும் ஏழ்மையான வம்சத்திலுதித்த ஒரு வாலிபன் ஓர் பரீட்சையில் தேறிவிட்டாலோ, அவன் தன்னு

---

இனிய நாவல்களையும், வேடிக்கை விகடங்களையும், சிறு கதைகளையும், சன்மார்க்க போதனைகளையும் வாசிக்க விரும்பினால் "ஆநந்த குணபோதினி" என்ற மாத சஞ்சிகையை வாங்குங்கள்.

டைய ஏழ்மைத்தனத்தினை மறந்து தன்குலத்திலுதித்துள்ள கன்னியர்களில் எவரையும் மணக்க விரும்பாமல் அதிகமான வரதட்சணையைக் கொண்டுவரும் கன்னிகையை எதிர் பார்க்கிறான்.

2. ஏழ்மையான வம்சத்திலுள்ள பெண்கள் எவ்வளவு அழகும் நற்குணமும் பொருந்தியவர் களா யிருந்தபோதிலும், கல்வி கற்றவர்களை மணக்க இயலாமல் தங்களைப் போல் ஏழை யொருவனை மணந்து ஆயுள் முழுவதும் அல்லலுடனே கழிக்க நேரிடு கின்றது.

3. ஓர் ஏழைக்கு ஒரு பிள்ளையும், ஒரு பெண்ணு மிருந்தால் அவன் பலரிடம் சென்று தன்னுடைய ஏழ்மைத் தினைக் கூறித் தன்னுடைய பிள்ளையை அவர்களுடைய உதவியால் கல்வி கற்க விடுகிறான். நற்காலத்திற்கிணங்க அப்பிள்ளை தன்னுடைய சாமர்த்தியத்தால் கல்வி கற்கப் பெற்றால், அதிக வரதட்சணை பெற்று ஓர் செல்வக்குடும்பத் தில் மணந்து அரசிலங்குமரன்போல் ஆநந்தமடைந்து வாழ் கின்றான். ஆனால், இவனுடன் பிறந்த சகோதரியானவள் தான் யாதொரு குற்றமும் செய்யாவிடினும் தன்னு டைய தந்தையின் ஏழ்மைத்தனத்தாலும், ஊக்கமின்மையா லும், ஓர் தனவந்தனையாவது, கல்வியில் தேர்ச்சியடைந்த வனையாவது மணக்க இயலாமலும் சொற்ப சம்பாதனை யுடைய ஒருவனையே மணந்து தன்னாயுள் முழுதும் துன்பத் துடனே யிருக்கலாகிறது.

---

"ஆநந்த குணபோதினி" என்ற சஞ்சிகை தமிழ் பண்டிதர்க ளாலும், நாவலர்களாலும், படித்தப் பெண்மணிகளாலும் தொகுக் கப்பட்டு பிரதிமாதமும் வெளியாக்கப்படுகிறது.

4. தங்களுடைய் மூதாதையர்கள் வைத்துச் சென்ற சொற்ப ஆஸ்தியுடன் தங்களுடைய சிறிய சம்பாதனையையும் கொண்டு உபாயமாகக் காலத்தைக் கழித்துவரும் தாய் தந்தையர்கள் தங்களுடைய பெண்ணிற்கு வரதட்சணையாக அச்சிறிய ஆஸ்தியினையும் கொடுத்துவிட்டு ஏங்கித் தவிக்கின்றனர். இதனைச் சகியாமல் சில பெண்களும் தங்களால் தாய் தந்தையர்களுக்கு யாதொரு துன்பமும் நேராவண்ணம் தற்கொலை புரிந்துவிடத் துணிகின்றனர். இதற்குதாரணமாக, சில வருடங்களுக்கு முன் வங்காளத்தில் ஸ்நேகலதா எனும் ஓர் அழகிய பெண், தான் அணிந்திருந்த உடையில் கிருசனையல் (Kerosine Oil) எனும் மண் எண்ணையை விட்டு கொளுத்திக்கொண்டு அவலமாய்த் தீக்கிரையாயினளெனக் கேட்டிருக்கின்றோம். இத்தகைய தற்கொலைக்குக் காரணம் என்ன என்பதைக் கவனியுங்கள்.

5. ஏழைத் தந்தைகள் தங்களுடைய இளம் பெண்களுக்குத் தகுமான கணவன் கிடைக்காமையால் கவலையடைந்து அக்கன்னியர்களை யெல்லாம் அவர்களைவிட இரண்டத்தனையோ, மூன்றத்தனையோ பங்கு வயதில் மூத்த கிழவர்களுக்கு மணமுடித்துக் கொடுக்கத் துணிகின்றனர்.

6. மணமாகாத பெண்களை வைத்துள்ள தாய் தந்தையர்கள், சீக்கிரம் கெட்டுப்போகும் சாமான்களை விற்பனைக்கு வைத்திருக்கும் வியாபாரிகள்போல், மணமாகாத வாலிபர்களிருப்பதாகக் கேள்விப்படும் இடங்களுக்கெல்லாம்

---

“ஆநந்த குணபோதினி” என்ற சஞ்சிகை ஸ்ரீமான், தி. இராஜகோபால் முதலியார் அவர்களால் பிரதிமாதமும் வெளியாக்கப்படுகின்றது.

வலியவே சென்று வியாபாரம் செய்யத் துணிகின்றனர். இவ்வாறு தாங்களே செல்ல விரும்பாத சில பூமான்கள் தங்களுக்காகத் தூதுசெல்ல ஓர் தரகிரியை நியமித்து விடுகின்றனர். அத்தரகிரிகள் சத்தியத்திற்கு அஞ்சாமல் பணத்திற்கு ஆசையடைந்து தங்கள் மனம்போல வாய்வந்த மட்டும் பொய் சொல்லி விவாகத்தை முடித்துவிட்டு இருதிறத்தாரிடமும் கஷ்டக்கூலி வாங்கிச் செல்கின்றனர். இவர்கள் கூறிய பொய்வார்த்தைகள் எல்லாம் விவாகமானபின் வெளியாகி பலவித வருத்தங்களுண்டாகின்றன.

7. விவாகமாகாமல் பல பெண்களை வைத்துள்ளோர், ஊரார் தங்களை இழிவுபடுத்திப் பேசுவார்களெனப் பயந்து, வரதட்சணை யென்னும் இக்கொடிய கட்டணத்தைக் கொடுக்க முன் வருகின்றனர்.

8. ஜாதிமதமே பெரிதெனக் கருதியுள்ள பலதனவந்தர்கள் இழிகுலத்தோரென அவமதிக்கப்பட்டால், அத்தகைய அவமானத்தினை யொழிக்க விரும்பி உயர்குலத்தி லுதித்த ஒருவனுக்கு தன் பெண்ணைக்கொடுத்து சமஜாதியர்களாக முன்வர வரதட்சணை சமர்ப்பிக்கின்றனர்.

9. மிகவும் குரூபியும் அங்கயீனமுமான பெண்களையுடையோர் தங்கள் பெண்களை மணக்க யாவரும் வாராமையால் வரதட்சணை கொடுக்கத் துணிகின்றனர்.

10. புருடர்களைவிட ஜனத்தொகையில் ஸ்திரீகளே அதிகமாயுள்ள நம் நாட்டில் பிரதி ஸ்திரீயும் மணஞ்செய்யப்பட வேண்டியது அவசியம் என்ற வழக்கம் உண்டாயிருப்ப

---

"ஆநந்த குணபோதினி" என்ற சஞ்சிகை தமிழ் பண்டிதர்களாலும், நாவலர்களாலும் படித்தப் பெண்மணிகளாலும் தொகுக்கப்பட்டு பிரதிமாதமும் வெளியாக்கப்படுகிறது.

தால், பெண்களுக்குப் புருடர்கள் கிடைப்பதே அறிதாகி விடுகின்றது. இதனால் வலியவே சென்று வாதட்சணை கொடுக்கலாகிறது.

11. வரதட்சணை எவ்வளவு அதிகமாகக் கொடுக்கப் பட்டாலும் வீண் சண்டைக்கிழுப்பதே தொழிலாய்த் திரியும் படிப்பற்ற தோல்வாய் மாமியானவள் தன்னுடைய மருமகள் போதுமான ஸ்ரீதனம் கொண்டுவரவில்லை யென்றும், அண்டைவீட்டு அம்மாகண்ணும், பக்கத்து வீட்டுப் பத்மாவதியும், எதிர்வீட்டு எல்லம்மாளும் அதிகமாக ஸ்ரீதனம் கொண்டுவந்தார்களென்றும் நீட்டி நீட்டிப் பேசி குற்றமற்ற மருமக்களின் மனதை வாட்டி வருத்தி விடுகின்றாள். இதனைச் சகியாத சில பெண்கள் தங்களது அருமை நாயகர்களை வெறுக்க நேருகின்றது.

12. ஜாதிமத வித்தியாசங்களால் அடக்கப்பட்டுள்ள நம் நாட்டில் சில ஜாதியர்களில் படித்தபிள்ளை கிடைப்பதே குதிரைக் கொம்பாயிருக்கிறது. அத்தகைய குலத்தில் ஒருவன் படித்திருந்தால் அவன் எளிதில் மணத்திற்கு இடம்தராமல் அதிக வரதட்சணையை ஆவலுடன் எதிர்பார்க்கின்றான். இத்தகையோன் தன் வம்சத்திலேயே பிறந்து தன் மனைவியாகக்கூடும் நிலைமையிலுள்ள அநேக கன்னியர்களை அவமதிக்கிறானென்பது ஆச்சர்யமல்ல. ஜாதி வித்தியாசங்களை யொழித்தால் இத்தகையோர்களுடைய பேராசையடங்கும்.

---

"ஆநந்த குணபோதினி" என்ற மாத சஞ்சிகையில் இனிய நாவல்கள், சிறு கதைகள், வேடிக்கை விகடங்கள், அரிய பாடல்கள் முதலியன வெளிவருகின்றன. வருட சந்தா தபாற்கூலி யுள்பட ரூபா 1—0—0.

ஜாதிமத வேறுபாடின்றி எந்த மதத்திலேயும் விவாகம் செய்துகொள்ளலாமென யாம் கூறுவதைக் கேட்டால் பலருக்கும் விநோதமாயிருக்கும். ஆனால், நம்முடைய சாஸ்திரங்கள் இவற்றை நிரூபிக்கின்றன.

எப்படியெனில், பரிசுத்தமான கல்வியையும், அழகிய மனைவியையும் எத்தகைய இழிகுலத்தோரிட மிருந்தேனும் பெறலாம் என மனுநீதியில் கூறப்பட்டிருப்பதைப் பரக்கக் காணலாம்.

அதுவுமன்றி, நம்முடைய புராணங்களில் ஸ்ரீமத் சம்பந்த சுவாமிகள் ஓர் வைசியகுலப்பெண்ணை மணக்க ஏற்பாடு செய்திருந்தார்களெனக் காண்கின்றோம்.

இழிகுலத்தி லுதித்த தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனார் ஓர் வேளாள மாதை மணந்ததாகவும் அறிகின்றோம்.

அன்பார்ந்த வாசகர்களே! வரதட்சணை கொடுக்க நேரும் காரணங்களையும் அதை வாங்குவதனால் உண்டாகும் தீமைகளையும் அதனால் நம்முடைய இந்திய சகோதரிகளுக்கு நேரும் அவமதிப்பினையும் ஆராய்ந்து பாருங்கள். பார்க்கின் இக்கொடிய பிசாசைத் துரத்திவிட வேண்டியது முக்கிய கடமையென எல்லோருக்கும் விளங்கும்.

பொது ஜன உழைப்பாளிகளாயும், ஆசாரசீர்திருத்தர்களாயுமுள்ள புண்ணிய புருடர்கள் இத்தகைய விஷயங்களை ஒழிக்க முயலவேண்டும். இப்போது நகத்தினால் கிள்ளி

---

" ஆநந்த குணபோதினி " என்ற மாத சஞ்சிகையின் வருட சந்தா ரூபா 1-தான்; இந்த தொகையை யனுப்பி உடனே சந்தாதாரர்களாகுங்கள்.

விடாமலிருந்தால் பின்னர் இதை வெட்டித்தள்ள ஓர் கோடாலி தேவையாகும்.

இக்கொடிய வழக்கமானது தடுப்பாரில்லாமல் தலை விரித்தாடி மனம்போல் திரிந்து தாராளமாக ஒவ்வொரு இந்திய தாய் தந்தையர்களின் வீட்டிலும் நுழைந்து தயை தாட்சண்யமின்றி விவாக விஷயங்களில் தலையிட்டு பலரை ஓட்டாண்டியாக்கி துக்கசாகரத்தில் மூழ்த்திவிடுகின்றது.

இதனை ஒழிக்கும் நிமித்தம் பற்பல அருமையான பிரசங்கங்கள் பல அறிவாளிகளால் செய்யப்படுகின்றன. ஒழுங்கான வியாசங்களும் வெளிவருகின்றன.

எவ்வளவு செய்தும் துக்கப்படும் தந்தையர்கள் துக்கப்பட்டுக்கொண்டேதா னிருக்கின்றனர்.

வாசகர்களே! துன்புற்றிருக்கும் கன்னியர்களும் அவர்களுடைய தாய்தந்தையரும் உங்களுடைய ஊக்கத்தினை அதிக ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். இப்போதே இவ்வழக்கத்தினை ஒழிக்க முயன்றால் நீங்கள் ஜனத்தொகையில் மிகுந்துள்ள நம் சகோதரிகளுக்குப் பெரு நன்மையினைச் செய்தவர்களாவீர்கள்.

சொற்ப சம்பாதனையுடன் பெண்களைப் பெற்றுள்ள தாய் தந்தையர்களுக்கு மனக்கொதிப்பினையும் பயத்தினையும் உண்டாக்கிவரும் இக்கொடிய வழக்கங்கள் நம் இந்திய நாட்டினின்றும் அடியோடு துரத்தப்பட்டுப் போகும் நாள் எந்நாளோ அந்நாளே நமக்கு நன்னாள்.

---

இனிய நாவல்களையும், வேடிக்கை விகடங்களையும், சிறு கதைகளையும், சன்மார்க்க போதனைகளையும் வாசிக்க விரும்பினால் "ஆநந்த குணபோதினி" என்ற மாத சஞ்சிகையை வாங்குங்கள்.

அநாகரீகமான வழக்கங்கள் ஒழிக்கப்பட்டு ஆண் பெண் ஆகிய இருபாலர்களுக்குள் ஏற்படும் அன்பானது இயற்கைத் தன்மையும் தெய்வீகமும் பொருந்தியதென அறியப் படல்வேண்டும்.

அன்பை விலைக்கு வாங்குதல் எளிதல்ல. நமது மதமே தெய்வத்தன்மை வாய்ந்தது என்பதை எல்லோரும் உணரல் வேண்டும்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றிற்று.

“ஆநந்த குணபோதினி” என்ற மாத சஞ்சிகையில் இனிய நாவல்கள், சிறு கதைகள், வேடிக்கை விகடங்கள், அரிய பாடல்கள் முதலியன வெளிவருகின்றன. வருட சந்தா தபாற்கூலியுள்பட ரூபா 1.

## இவைகளில் எது வேண்டும்?

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.
சித்திரப்படங்களுள்ளது. விலை ரூபா 2--0—0.

மணவாழ்க்கையின் மர்மங்கள்.
அநேக படங்களுள்ளது. விலை ரூபா 2—4—0.

இல்லற வாழ்க்கையின் இன்ப இரகசியங்கள்
அநேக சித்திரப்படங்களமைந்தது. விலை ரூபா 2—0—0.

ஸ்திரீ புருஷ ரகசியம்.
அல்லது
இன்பரச சாஸ்திரம் விலை ரூபா 1—8—0

கர்ப்ப சாஸ்திரம்.
ஏராளமான படங்களுள்ளது. விலை ரூபா 1—8—0.

ரதி சாஸ்திரம்.
அநேக படங்களுள்ளது. விலை ரூபா 1—4—0.

சதிபதிகளின் மர்மம்.
அநேக படங்களுள்ளது. விலை ரூபா 1—4—0

சரீர மர்ம சாஸ்திரம்.
ஏராளமான படங்களுள்ளது விலை ரூபா 1—0—0.

ரதிமதன சிருங்கார ரஹஸ்யம்.
விலை ரூபா 1—0—0.

மதனரதி ரஹஸ்யம்.
அநேக படங்களுள்ளது. விலை ரூபா 1—0—0.

ருக்மணி அல்லது ஸ்திரீ புருஷ மகத்துவம்.
விலை ரூபா 1—0—0.

தி. இராஜகோபால் முதலியார்,
நெ. 302, தங்கசாலைத் தெரு, சென்னை.


"அநந்த குணபோதினி" பிரஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை.

எங்களிடத்தில் ருசிகரமான தமிழ் நாவல்களும் கதைப்புத்தகங்களும், வேதாந்த புஸ்தகங்களும், சைவ புராணங்களும் கிடைக்கும். தேவையுள்ளவர்கள் எழுதினால் நாங்கள் புஸ்தகங்களைப் பார்வையிட்டு நல்லதாக அனுப்புகிறோம்.

# எமது சொந்தப் பிரசுரங்கள்.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி (தமிழ்) | ... | 2 | 0 |
| ஷை தெலுங்கு பதிப்பு | ... | 2 | 0 |
| அங்கயற்கண்ணி அல்லது அன்புள்ள மங்கை | ... | 1 | 12 |
| திருக்கழுக்குன்றத்துக் கொலை | ... | 1 | 8 |
| அமிர்தகுமாரி அல்லது செஞ்சிப் புதையல் | ... | 1 | 4 |
| அம்பலவாணன் அல்லது கற்பகவனத்தில் நடந்த கடுங்கொலை | ... | 1 | 0 |
| 1000-தலைவாங்கிய அதிசய சிந்தாமணி | ... | 1 | 0 |
| மாணிக்கவல்லி அல்லது ஓர் மாதின் மர்மம் | ... | 1 | 0 |
| இரத்தினாங்கி அல்லது இரதிவிலாச மர்மம் | ... | 1 | 0 |
| எமகாதகன் அல்லது மாயாஜித்தன் | ... | 0 | 8 |
| நவீன நவரத்ன ஒப்பாரி | ... | 0 | 5 |
| கண்ணைக் கட்டிக் காலங்கழிக்கும் மிஸ்டர் திண்ணைத் தூங்கி தடிராமன் | ... | 0 | 6 |
| கணவனின் கடமை அல்லது பெண்களின் நிலைமை | ... | 0 | 4 |
| மாமிகளின் துபரம் அல்லது மருமக்களின் கொண்டாட்டம் | ... | 0 | 2 |
| காதலற்ற கல்யாணம் அல்லது பெண்வீட்டாரைக் கொள்ளையடித்தல் | ... | 0 | 1 |

குறிப்பு :—இவை அனைத்தும் எமது சொந்தபிரசுரமானபடியினால் புஸ்தக வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும். இன்னும் பலவிதமான சாமான்களும் ஏனைய புஸ்தகங்களும் எமது கம்பெனியில் கிடைக்கும். தேவையுள்ளவர்கள் எமது கம்பெனிக்கு எழுதினால் அனுப்பப்படும்.

எங்கள் புத்தகங்கள் எல்லா புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

10-ம் பதிப்பு ! வெளிவந்து விட்டது 10-ம் பதிப்பு !!

எமது ரிஜிஸ்டர் லேடி டிரேட் மார்க் போட்டிருக்கும்
“ ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி ” யைப்
பார்த்து வாங்குங்கள் மோசம் போகாதீர்கள்.

தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டுலட்சத்து ஐம்பதி னாயிரம் ஜனங்களுக்கு சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொடுத்ததும், இதைப்போன்ற அநேக புத்தகங்கள் பின்னால் பணம் பறிக்கும் பொருட்டு அநேகரால் தயார் செய்யப்பட்டாலும் முதன் முதல், வெளிவந்ததும், நிகரற்றதும், நற்பாதியும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் சென்னை சட்டசபை வித்யா இலாகா கனம் மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிட மிருந்து உயர்ந்த நற்சாக்ஷிப்பத்திரம் பெற்றதுமான, எமது

## ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி

10-ம் பதிப்பு வெளிவந்து சுமார் 2000 காப்பிகள் இரண்டுவாரங்களுக்குள் பறந்துபோய்விட்டன. உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் 60-நாளில் இங்கிலீஷ் கற்றுக் கொள்ள உதவும் புத்தகம் இது ஒன்றுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மிகவும் முக்கியமானது. இப்பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு 1-அணு முதல் 3,000-ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்கும் போடப்பட்டிருக்கிறது.




எங்கள் ஆங்கில ஆசானைப்போல் பல போலிப் புத்தகங்கள் வெளி வந்துள்ளன. “ஆங்கில ஆசான்” என்ற பெயர்பார்த்தும், இப்படத்தில்காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்துப் பார்த்து புத்தகம் வாங்குங்கள். உண்மையான “ஆங்கில ஆசான்” இதுதான்.

**800-பக்கம் காலிகோ பயிண்டு**
**விலை ரூபா 2 0 0**

ஷை புத்தகம் தெலுங்கு பாஷையிலும் கிடைக்கும். விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார் 302, தங்கசாலை வீதி, மதராஸ்.